(இ) ஆமெனில், கல்வித் துறையின் 17-10-1974 ஆம் நாளிட்ட 1786-எண் அரசாணையில் வகைசெய்துள்ளவாறு மேற்சொன்ன இருவகையினரில், பின்னர் சொல்லப்பட்ட வகையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை

(இ) முன்பு, அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் அரசிதழ் பதிவுள்ள தலைமையாசிரியர் பணிக்கு மாவட்ட அளவில் மூப்பு நிலைப்படி நியமனம் செய்யப்பட்டனர். 17-10-74 நாளிட்ட கல்வித்துறை அரசாணை நிலை எண் 1786-ல் மாநில அளவில் மூப்பு நிலைப்படி 'பி' பிரிவு பள்ளிகளில் அரசிதழ் பதிவுள்ள தலைமை ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களின் மூப்பு நிலையை எவ்வாறு நிர்ணயிப்பது என்பது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: 17-10-1974-க்கு முன்னர் ஒரேயொரு முறை தான் முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளியில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு அரசிதழ் பதிவு கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு மாவட்ட ரீதியாக அவர்களுடைய "சீனியாரிட்டி"ஐ வைத்துக் கொடுத்தார்கள். இப்போது மாநில அளவில்தான் மூப்பு நிலை நிர்ணயிக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படியானால், முன்னரே மாவட்ட ரீதியாக சீனியாரிட்டியை வைத்து அரசிதழ் அந்தஸ்து பெற்ற தலைமையாசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அதிகாரி பதவி கொடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாவட்டக் கல்வி அதிகாரிகள் பதவி 30 சதவீதம் பி-பிரிவுக்கு என்று ஒதுக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்பது போன்று, ஏற்கெனவே கெஜட்டட் பதவிக்கு வந்திருப்பவர்களை எந்த வகையில் சேர்ப்பது என்பதுபற்றித் தனியாக ஆராயலாம்.

Permission to Tamil Pandits for appearing for B. Litt. Examination

* 23. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representation to permit all the Tamil Pandits to appear for the B. Litt. Examination and to make arrangements for the conduct of the examination in 'B' group subject of the fourth year during the academic year 1975-76 itself; and

(b) if so, the action proposed to be taken by the Government?

[1975 அக்டோ

தமிழாசிரியர்களுக்கு 'பி.லிட்' தேர்வு எழுத அனுமதி.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) தமிழாசிரியர்களாகப் பணியாற்றும் அனைவரையும் 'பி.லிட்' தேர்வில் எழுத அனுமதிக்குமாறும், 4-ம் ஆண்டிற்குரிய 'பி' தொகுதி பாடங்களில் 1975-76 ஆம் கல்வி ஆண்டிலேயே தேர்வு நிகழ்த்த ஆவன செய்யுமாறும், வேண்டுகோள் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தமிழாசிரியர் கழகத்தினுடைய பொதுக் குழுவின் சார்பிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க எந்தத் தீர்மானமும் வரவில்லை என்று எப்படி அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதனுடைய நகல் கூட என்னிடம் இருக்கிறது. மாநில தமிழ் ஆசிரியர் கழகத்தினுடைய சார்பாக, தமிழாசிரியர்களாகப் பணியாற்றும் அனைவரையும் 'பி-லிட்' எழுத அனுமதிக்குமாறு கேட்டு, தீர்மானம் அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வராததன் காரணமாகத்தான் இல்லையென்று சொல்லுகின்றோம். இங்கு வந்து சேரவில்லை. ஆகையால் முறைப்படி அனுப்பப்படவில்லை என்றுதான் தெரியவருகின்றது. மேலும் சென்னைப் பல்கலைக் கழகம் தீர்மானம் நிறைவேற்றி இந்த ஆண்டிலிருந்து அவர்கள் பரீட்சை எழுதலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆக 1976-லே அடிப்படையிலே இரண்டு பிரிவுகள் எழுதினால் போதும். அந்த முறை இந்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படுகிறது.

The Registrar, University of Madras has stated that such candidates who are employed as teachers in recognised schools within the University area having three years of service will be permitted to appear for the 4th year ancillary paper for the examination in 1976.

(பிற்பகல் 4-10)

திரு. கே. எஸ். கணபதி: 1976-லிருந்து அவர்கள் பி.லிட். தேர்வுக்கு அனுமதிக்கப்படலாம் என்று உத்தரவு வந்து விட்டது. அவர்கள் பி.லிட். பெற்ற பிறகு, எம்.ஏ. எழுதலாமா என்று மறுமுறை கேட்டிருக்கிறார்கள். 1976-78-ல் எம்.ஏ. தேர்வுக்கு அமர அரசு அவர்களை அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றி பல்கலைக் கழகம்தான் முடிவு செய்ய வேண்டும்.

Industrial Training Institutes for Physically Handicapped Persons

* 24. Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state whether there is any proposal with the Government to form an Industrial Training Institute in each District for the physically handicapped persons?

உடல் ஊனமுற்றோர்க்கு தொழிற் பயிற்சி நிலையங்கள்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

உடல் ஊனமுற்றோர்க்கு தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : இல்லை.

Building for the Panchayat Office at Manamerkudi, Pudukkottai District

* 25. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any request for the construction of a building for the Panchayat Office at Manamerkudi, Pudukkottai District, has been received; and

(*b*) if so, the action taken thereon by the Government?

புதுக்கோட்டை மாவட்டம், மணமேற்குடியில் பஞ்சாயத்து அலுவலகத்துக்கு கட்டிடம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், மணமேற்குடியில் பஞ்சாயத்து அலுவலகத்துக்கு கட்டிடம் கட்டவேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்ததா ?